www.Padasalai.Net www.CBSEtips.in

V6SS

விருதுநகர் மாவட்டப் பொதுத் தேர்வுகள்
தொகுத்தறி தேர்வு - டிசம்பர் 2022

-----

**வகுப்பு 6**

காலம்: 2.00 மணி **சமூக அறிவியல்** மதிப்பெண்கள்: 60

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **5×1=5**

1) நம் நாட்டின் தேசியக் குறிக்கோள் 'வாய்மையே வெல்லும்' ______ லிருந்து எடுக்கப்பட்டது.
a) பிராமணம் b) ஆரண்யகம் c) வேதம் d) உபநிடதம்

2) புத்தர் தனது முதல் போதனையை (உரையை) எங்கு நிகழ்த்தினார்?
a) லும்பினி b) சாரநாத் c) தட்சசீலம் d) புத்தகயா

3) நிகேட்டரின் தூதுவர் ______
a) தாலமி b) கௌடில்யர் c) செர்சக்ஸ் d) மெகஸ்தனிஸ்

4) விடுதலை நாளின்போது டெல்லியில் கொடியேற்றுபவர் ______
a) பிரதம அமைச்சர் b) குடியரசுத்தலைவர்
c) துணைக் குடியரசுத் தலைவர் d) அரசியல் தலைவர் எவரேனும்

5) இந்திய குடிமக்களின் வாக்குரிமைக்கான வயது ______
a) 14 b) 18 c) 16 d) 21

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:** **4×1=4**

6) வேத காலத்தில் மக்களிடமிருந்து ______ என்ற வரி வசூலிக்கப்பட்டது.

7) மௌரியப் பேரரசைத் தோற்றுவித்தவர் ______.

8) ______ வளம் மிகவும் மதிப்புமிக்க வளமாகும்.

9) சக ஆண்டு முறையைத் துவக்கியவர் ______

**III. பொருத்துக:** **4×1=4**

10) கீழடி - லாக்டோ பேசில்லஸ்
11) ஆதிச்சநல்லூர் - பகடை
12) இயற்கை வளம் - தங்க ஆபரணங்கள்
13) தேசிய நுண்ணுயிரி - காடுகள்

**IV. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **5×1=5**

14) சரியான விடையைக் கண்டறியவும்
விகாரைகள் எதற்காகப் பயன்படுத்தப்பட்டன?
1) கல்விக் கூடமாக 2) பௌத்தத் துறவிகளின் தங்குமிடம்
3) புனிதப் பயணிகள் தங்குவதற்காக 4) வழிபாட்டுக் கூடம்
a) 2 சரி b) 1 மற்றும் 3 சரி
c) 1, 2, 4 ஆகியவை சரி d) 1 மற்றும் 4 சரி

15) *சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்:*
தேசியக் கீதம் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்ட ______ (1950/1947)

16) *சரியா? தவறா?*
நடுகல் என்பது மதிப்பு வாய்ந்த மரணத்தைத் தழுவிய ஒரு வீரனின் நினைவாக நடப்படுவதாகும்.

17) *பொருந்தாததை வட்டமிடுக:*
பார்சவா, மகாவீரர், புத்தர், ரிஷபர்

18) *பொருந்தியுள்ளவற்றில் சரியானதைத் தேர்ந்தெடுக்கவும்:*
1) ரவீந்திரநாத் தாகூர் - a) தேசியப் பாடல்
2) பங்கிம் சந்திர சட்டர்ஜி - b) தேசியக் கொடி
3) பிங்காலி வெங்கையா - c) வான் இயற்பியலாளர்
4) மேக்நாத் சாகா - d) தேசிய கீதம்

| | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|
| அ) | a | d | b | c |
| ஆ) | d | a | c | b |
| இ) | d | a | b | c |

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com

**V6SS**

**V. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்:** 3×1=3

19) நான்கு வேதங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
20) பௌத்தத்தின் இரு பிரிவுகள் எவை?
21) மௌரியர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்ற ஒரு தமிழ் நூல் கூறுக.
22) வளங்கள் என்றால் என்ன?
23) நிலையான வளர்ச்சி என்றால் என்ன?

**VI. சுருக்கமாக விடையளி: (ஏதேனும் 5)** 5×2=10

24) கற்திட்டைகள் என்பது என்ன?
25) பௌத்தத்தின் நான்கு பேருண்மைகளை எடுத்துரைக்கவும்.
26) மகதத்தின் எழுச்சிக்கான காரணங்களில் ஏதாவது மூன்றினை எழுதுக.
27) உலகளாவிய வளங்கள் மற்றும் உள்ளூர் வளங்களை வேறுபடுத்துக.
28) வனப்பாதுகாப்பைப் பற்றி காந்தியடிகளின் சிந்தனை என்ன?
29) தேசியக் கொடியில் உள்ள நிறங்கள் குறிப்பன எவை?
30) அடிப்படை உரிமைகள் என்றால் என்ன?
31) பண்டமாற்று முறை என்றால் என்ன?

**VII. விரிவாக விடையளி: (ஏதேனும் 4)** 4×5=20

32) குருகுலக் கல்வி முறைக்கும் நவீன கல்வி முறைக்குமிடையே உள்ள வேறுபாடுகள் யாவை?
33) கலிங்கப் போர் அசோகரது வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது எவ்வாறு?
34) இயற்கை வளங்களை வகைப்படுத்துக. ஏதேனும் மூன்றினை விவரித்து உதாரணத்துடன் விளக்குக.
35) வளத்திட்டமிடல் என்றால் என்ன? அதன் அவசியம் என்ன?
36) இந்திய நாணயத்தின் குறியீட்டின் வடிவத்தை வரைந்து வரையறுக்கவும்?
37) வரையறு: இறையாண்மை
38) மூலப்பொருட்களின் பயன்பாட்டின் அடிப்படையில் எவ்வாறு தொழிற்சாலைகள் வகைப்படுத்தப்படுகின்றன?
39) *கட்டக வினாக்கள்:*
   1] புத்தர் என்பதன் பொருள் என்ன? ______
   2] ''தர்ம சக்கரா பரிவர்த்தனா'' உரை நிகழ்த்தியவர் யார்? ______
   3] சமணத்தின் 24வது தீர்த்தங்கரர் யார்? ______
   4] பௌத்தத்தின் எத்தனை பேருண்மைகள் உள்ளன? ______
   5] இரட்டைக் காப்பியங்களில் ஒன்றின் பெயரைக் குறிப்பிடுக ______

**VIII.** 4×1=4

40) *a]* இந்திய ஆறுகள் வரைபடத்தில் கீழ்க்காணும் இங்களை குறிப்பிடவும்: (ஏதேனும் 4)
   1) தட்சசீலம்
   2) பாடலிபுத்திரம்
   3) உஜ்ஜைனி
   4) இந்திர பிரஸ்தம்
   5) சாஞ்சி

   *b]* இந்தியப் புறவரி நிலவரைபடத்தில் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கவும்: (ஏதேனும் 5) 5×1=5
   1) நெய்வேலி
   2) வங்காள விரிகுடா
   3) அரபிக்கடல்
   4) தமிழகக் காடுகள்
   5) இந்தியப் பெருங்கடல்
   6) மன்னார் வளைகுடா
   7) கஞ்சமலை இரும்புத் சுரங்கம் (சேலம்)

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.net@gmail.com